# பகுதி 8

## பொதுவாக கேட்கப்படும் கேள்விகள்

மாணவர்களினால் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்கள் இப்பிரிவில் உள்ளடங்கியுள்ளன. உதாரணமாக, பல்கலைக்கழக அனுமதிக்காக மாணவனின் மாவட்டத்தை தீர்மானிக்கும் முறை, உள்நிலை மாணவராக ஒரு பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்த பின்னர் அதற்குப்பின் வரும் வருடத்தில் க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியுமா போன்ற கேள்விகளும் மற்றும் மேலும் பல அடிக்கடி கேட்கப்படும் வினாக்களும் இப்பிரிவில் உள்ளடங்குகின்றன.

இப்பிரிவை நீங்கள் கட்டாயம் வாசித்தல் வேண்டும். உங்களுடைய கேள்விகளுக்கு இப்பிரிவில் பதில் கிடைக்காவிட்டால் நீங்கள் எங்களை எழுத்து மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்புகொள்ளலாம். நாங்கள் அதற்கு பதிலளிப்போம். வருங்கால வெளியீடுகளில் இவ்வாறான கேள்விகளுக்குரிய பதில்களை உள்ளடக்குவோம்.

# பகுதி 8

## பொதுவாக கேட்கப்படும் கேள்விகள்

1. **நான் பல்கலைக்கழக அனுமதிக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது?**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.ugc.ac.lk) காணப்படும் இலத்திரனியல் விண்ணப்பத்தை நிரப்பி சமர்ப்பிப்பதுடன் அவற்றின் அச்சுப்பிரதியை பத்திரிகை அறிவித்தல்களினுடாக அறிவிக்கப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கவும்.

**முக்கியம்:**
**பல்கலைக்கழக அனுமதிக்கு இணையதளத்தினூடாக விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.**

2. **யுனி கோட் (Uni-Code) என்றால் என்ன?**

யுனி கோட் ஒர் தனித்துவமான குறியீடாக (தனித்துவமான அடையாளம்) குறித்த பல்கலைக்கழகத்தின்/ வளாகத்தின்/ உயர் கல்வி நிறுவனங்களின் தனித்தனி வெவ்வேறு கற்கைநெறிகளை குறிக்கும்.

எல்லா யுனி கோட்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவின் பக்கம் 139 - 146 இல் தரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவத்தை இணையதளம் மூலம் பூர்த்தி செய்யும் போது யுனி கோட் (Uni-Code) இனை பயன்படுத்தி தமது விருப்பொழுங்கை குறிப்பிடுதல் வேண்டும்.

யுனி கோட் (Uni-Code) இனை பயன்படுத்தி விருப்பொழுங்கை சரியாக குறிப்பிடும் முறை பல்கலைக்கழக கைநூலின் பகுதி 3 இல் தரப்பட்டுள்ளது. ஆகவே யுனி கோட் விருப்பொழுங்கை குறிப்பிட/ மாற்ற முன்னர் அவ் பகுதியினை நன்கு வாசித்து விளங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

3. **இணையதளத்தினூடாக விண்ணப்பபடிவத்தை பூரணப்படுத்த முன்னர் ஒழுங்குபடுத்தப்பட்ட யுனி கோட் இனை தயார்படுத்தியிருத்தல் ஏன் அவசியமானது?**

விருப்பொழுங்கில் குறிப்பிடப்பட்ட யுனி-கோட்களுக்கு (கற்கைநெறிகளுக்கு) மாத்திரமே பரிட்சாத்திகள் கருத்தில் கொள்ளப்படுவர். விருப்பொழுங்கில் குறிப்பிடப்படாத யுனி-கோட்களுக்கு (கற்கைநெறிகளுக்கு) அவர்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டர்.

இதற்கமைய Z புள்ளியினடிப்படையில் தேர்வாகத் தகுதியான யுனி கோட் குறித்த பரிட்சாத்தியின் விருப்பொழுங்கில் இல்லாதவிடத்து அவ் யுனி-கோட்டிற்கு அன்றி குறித்த பரிட்சாத்தியின் விருப்பொழுங்கில் குறிப்பிடப்பட்டுள்ள அடுத்த யுனி-கோட்டிற்கே அவர்கள் கருதப்படுவர். எனவே இணையதளத்தினூடாக விண்ணப்பபடிவத்தை □ரணப்படுத்த முன்னர் கவனமாக ஒழுங்குபடுத்தப்பட்ட யுனி கோட்களின் பட்டியலை தயார்படுத்தியிருத்தல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறீர்.

மேலும் உச்ச எண்ணிக்கையான யுனி கோட்களை விருப்பொழுங்கில் குறிப்பிடுவதன் மூலம் நீர் தகுதி பெறத்தக்க யுனி கோட்களை நீர் விருப்பொழுங்கில் குறிப்பிட தவறியமையால் குறித்த யுனி கோட்டிற்கு நீர் தெரிவாகாமல் போவதை தவிர்க்க முடியும்.

4. **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்ததன் பின்னர் குறிப்பிட்ட விருப்பொழுங்கை மாற்ற முடியுமா?**

ஆம். இக்கைநூலின் அறிவுறுத்தல்களுக்கமைய விண்ணப்ப முடிவுத்திகதியிலிருந்து இரு வார காலத்தினுள் கற்கைநெறி விருப்பொழுங்கை மாற்ற முடியும்.

இக்கைநூலில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விண்ணப்பதாரிகள் இணையதளம் மூலம் விருப்பொழுங்கை மாற்றி அதன் சரியாக □ரணப்படுத்தப்பட்டு ஒப்பமிடப்பட்ட பிரதியை பதிவுத் தபாலில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

முக்கியமாக உங்களால் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் காணப்படும் உங்கள் கையெழுத்தும் தற்போது நீங்கள் சமர்ப்பித்துள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கை (**Uni- code**) மாற்றல் விண்ணப்பத்தில் காணப்படும் கையெழுத்தும் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கை (**Uni-code**) இச்சந்தர்ப்பத்தில் மாற்றம் செய்கின்றபோது, முன்பு சமர்ப்பித்த கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கு முற்றாக நிராகரிக்கப்படுவதுடன் நீங்கள் தற்பொழுது சமர்ப்பித்துள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு கருத்தில் கொள்ளப்படுவீர்கள்.

5. **இணையதளத்தினூடாக கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கான விருப்பொழுங்கை மாற்றுவது எவ்வாறு?**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளத்தில் (www.ugc.ac.lk) உங்கள் பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி உமது கணக்கினுள் உட்பிரவேசித்து விருப்பொழுங்கை மாற்றலாம். அத்துடன் அதை அச்சுப்பிரதி செய்து உங்கள் கையொப்பத்தோடு பதிவுத் தபாலில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கவும்.

6. **பல்கலைக்கழக அனுமதிக்கான எனது விண்ணப்படிவம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைத்ததா என்பதை நான் எவ்வாறு அறிந்துகொள்வது?**

உமது விண்ணப்பம் கிடைக்கப்பெற்றவுடன் உமது விண்ணப்பப்படிவத்தில் நீர் குறிப்பிட்டுள்ள கையடக்க தொலைபேசி இலக்கங்களுக்கு குறுஞ்செய்தி ஊடாக நீர் அறிவிக்கப்படுவீர்.

7. **கற்கைநெறிக்கான வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதற்கு முன்னர் ஒரு மாணவர் எந்த கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவார் என்பதை முன்கூட்டியே எதிர்வுகூற முடியுமா?**

இல்லை.

கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கான வெட்டுப்புள்ளி மாணவர்களின் ‘Z’ புள்ளி விண்ணப்பதாரிகளின் விருப்பொழுங்கு மற்றும் பல்கலைக்கழகங்களில் காணப்படும் கற்கைநெறிக்கான இடங்கள் என்பவற்றின் அடிப்படையில் அமையும்.

8. **தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் பாடசாலை விடுகைப் பத்திரத்தின் மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் கட்டாயமானதா?**

ஆம்.
பாடசாலை விடுகைப் பத்திரத்தின் மூலப் பிரதியை (Original) சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

9. **பல்கலைக்கழகங்களில் கற்கைநெறிகளுக்கான வெவ்வேறு மாவட்டங்களின் வெட்டுப்புள்ளியினை ஒரு மாணவன் அறிந்துகொள்வது எவ்வாறு?**
   1. செய்தித்தாள்
   2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளம், www.ugc.ac.lk
   3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மக்கள் தொடர்பு அலுவலகம்
   4. அரச தகவல் நிலையத்தின் (1919) குறுஞ்செய்தி (SMS) சேவையினூடாக

10. **நான் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளேனா என்பதை எவ்வாறு அறிந்துக்கொள்வது?**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடிதம்/ மின்னஞ்சல் / SMS மூலமாக உங்களுக்கு அறிவிக்கும்.

11. **பரஸ்பர இடமாற்றம் (Mutual Transfer) அனுமதிக்கப்படுமா?**

இல்லை.

12. **எனது Z புள்ளி கடந்த வருட கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலின் ஒரு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கான வெட்டுப்புள்ளியை விடவும் குறைவாக இருக்கும் பொழுதும் அக்கற்கைநெறிக்கு நான் விண்ணப்பிக்க முடியுமா?**

முடியும்.

சென்ற ஆண்டிற்கான வெட்டுப்புள்ளிகளை கருத்திற்கொள்ளாமல் நீர் விரும்புகின்ற அனைத்து கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்க வேண்டும். மாணவர்களின் செயற்றிறன் (Z புள்ளிகள்) மற்றும் பல்கலைக்கழகங்களில் கற்கை நெறிக்கான இடங்கள் என்பனவற்றின் அடிப்படையில் ஓர் கற்கைநெறிக்கான வெட்டுப்புள்ளி வருடா வருடம் வேறுபடலாம்.

சில மாணவர்கள் தேவையான Z புள்ளிகளைப் பெற்றிருப்பினும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்காது க.பொ.த. (உ/த) பரீட்சையில் இன்னுமொரு அமர்வினை மேற்கொள்ள விரும்புவர். இன்னும் சில மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டும் பதிவு செய்யாமல் விடுவர். அதனால் மாணவர்கள் அனுமதிக்கு விண்ணப்பிப்பின் கற்கைநெறிகளுக்குத் தெரிவு செய்யப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறைய காணப்படுகின்றது. அதனால் நீங்கள் தகமை பெறுகின்ற கற்கைநெறிகளுக்கு முடிந்தளவு விண்ணப்பிக்கவும்.

13. **ஒரு கல்வியாண்டில் பல்கலைக்கழக கற்கைநெறிக்குப் பதிவுசெய்த பின்பு மீண்டும் க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றி மீண்டுமொரு முறை பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியுமா?**

இல்லை.

அரச உயர்கல்வியைப் பெறுவதற்கு சகல மாணவர்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. அனைவருக்கும் நியாயமான முறையில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட இலவச கற்கை நெறிக்கு நுழைவதற்கான சந்தர்ப்பம் ஒரு தடவை மாத்திரமே வழங்கப்படுகின்றது.

ஏனெனில் தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறியின் பதிவினை வாபஸ் பெறல் அல்லது பட்டப்பயில் நெறிக்கு பதிவுசெய்தும் அதனை பின்தொடராமல் விடுதல் என்பன குறித்த கல்வியாண்டில் இன்னொரு மாணவனுக்கான பல்கலைக்கழக வாய்ப்பினை இழக்கச் செய்கின்றது. அத்துடன் பதிவை வாபஸ்பெற்று அடுத்துவரும் ஆண்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றுமொரு கற்கைநெறிக்கு பதிவுசெய்துகொள்ள கோருவதன் மூலம் அவ்வாண்டில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவனுக்கான ஒரு வாய்ப்பினையும் தவிர்ப்பதற்கு முயற்சிசெய்கின்றீர்.

14. **ஒரு மாணவர் எப்போது பல்கலைக்கழகத்தில் / உயர் கல்வி நிறுவனத்தில் பதிவுசெய்த மாணவராக கருதப்படுவார்?**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பல்கலைக்கழக தெரிவுக்கான கடிதம் விண்ணப்பதாரிக்கு கிடைத்தவுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்கிற்கு பதிவுக்கட்டணமான ரூபா 50/- இனை வங்கி மூலமாகவோ அல்லது இணையதளத்தினூடாகவோ வரவு வைத்து பதிவு செய்வதற்கான இறுதித்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழக/உயர்கல்வி நிறுவன கற்கைநெறிக்கு பதிவுசெய்வதன் மூலம் அவர் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, கீழே பிரிவு 1.6. (8) இல் காணப்படும் பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனமொன்றில் பதிவு செய்த மாணவராக கருதப்படுவார்.

15. **விண்ணப்பதாரியின் அனுமதிக்கான மாவட்டத்தை தீர்மானிப்பதன் அடிப்படைகள் என்ன?**

க.பொ.த. (உ/த) பாடங்களைக் கற்ற மூன்று வருட காலத்தில் குறைந்தது ஒரு ஆண்டு அல்லது அதற்கு மேலாக நீர் கல்விகற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

16. **அம்மூன்று வருடங்கள் எவ்வாறு கணக்கிடப்படும்?**

க.பொ.த. (உ/த) பரீட்சை நடைபெற்ற மாதத்திற்கு உடனடியான முந்திய மாதத்தின் கடைசி நாளன்று முடிவடையும் பின்னோக்கிய மூன்று வருட காலம் கணிக்கப்படும். உதாரணமாக - க.பொ.த. (உ/த) பரீட்சை டிசம்பர் மாதம் நடைபெற்றிருப்பின் பின்னோக்கிய நவம்பர் 30 ஆம் திகதியிலிருந்து பின்னோக்கி மூன்று வருடம் கணிக்கப்படும்.

17. **அம்மூன்றுவருடக் காலப்பகுதிக்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்றிருப்பின்?**

அக்காலப்பகுதியில் விண்ணப்பதாரி ஆகக் கூடுதலான நாட்கள் (எவ்வாறாயினும் அக் காலப்பகுதி குறைந்தது ஒரு ஆண்டு அல்லது அதற்கு கூடவாக இருத்தல் வேண்டும்) கல்விகற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டமாக கருத்திற்கொள்ளப்படும்.

18. **எந்தவொரு பாடசாலைக்கும் செல்லாமலிருந்தால் அல்லது ஒரு வருடத்துக்கு குறைவான காலப்பகுதிக்கு பாடசாலைக்குச் சென்றிருப்பின்?**

உங்கள் நிரந்தர வதிவிடம் அமைந்துள்ள மாவட்டம் பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டமாக கருதப்படும். இதனை நிரூபிப்பதற்கு பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் பிரிவு 1.5 இல் குறிப்பிட்ட ஆவணங்களை சமர்ப்பித்தல் கட்டாயமானது.

19. **பிரயோக/உளச்சார்பு பரீட்சை சம்பந்தமான விபரங்கள் மற்றும் பரீட்சை நடைபெறும் திகதிகள் பற்றி ஏன் கைநூலில் குறிப்பிடப்படவில்லை?**

பிரயோக / உளச்சார்பு பரீட்சைகள் குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்படுகின்றன. இப்பரீட்சைக்கான திகதி பல்வேறு காரணங்களினால் வருடா வருடம் மாறுபடலாம்.

ஒவ்வொரு பல்கலைக்கழகமும் பிரயோக / உளச்சார்பு பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை அறிவித்தலை பிரசுரிக்கின்றது. உளச்சார்பு பரீட்சையில் சித்தியடைய வேண்டிய கற்கைநெறிகளையும் அவை தொடர்பான பல்கலைக்கழங்களையும் கைநூலின் பகுதி 5 விபரிக்கின்றது. உளச்சார்பு பரீட்சை பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்படுவதால் அவை தொடர்பான விபரங்களை மாணவர்கள் உரிய பல்கலைக்கழகங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். பல்கலைக்கழகங்களின் தொடர்பு இலக்கங்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலின் இணைப்பு D இல் தரப்பட்டுள்ளது.

20. **உளச்சார்பு பரீட்சையில் சித்தியடைந்திருப்பினும் கற்கைநெறிக்குரிய வெட்டுப்புள்ளி குறைவாயின்?**

கற்கைநெறிக்கு தகுதிபெறுவதற்கு பிரயோக / உளச்சார்பு பரீட்சையில் சித்தி பெறுவதுடன் நீர் தேவையான Z புள்ளிகளையும் பெற்றிருத்தல் வேண்டும். போதிய Z புள்ளிகளை பெறாமல் பிரயோக / உளச்சார்பு பரீட்சையில் மாத்திரம் சித்திபெற்றிருப்பின் பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவு செய்யப்படமாட்டீர்.

21. **பதிவுசெய்த பின் அனுமதியை பிற்போட முடியுமா?**

தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் பதிவுசெய்த பின்னரே மாணவர் அனுமதியைப் பின்போட அனுமதிக்கப்படுவர். அத்துடன் உண்மையான காரணங்களுக்காக மட்டுமே ஒத்திவைப்பு ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு முறை பதிவினை மேற்கொண்டால், கற்கைநெறியை ஒத்திவைப்பினும் மற்றுமொரு க.பொ.த.(உ/த) பரீட்சையின் சிறந்த பெறுபேறுகளின் அடிப்படையில் வேறொரு கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியாது. பல்கலைக்கழகங்களில் அல்லது உயர் கல்வி நிறுவனங்களில் பதிவு செய்வதற்கான வாய்ப்பு ஒரு முறை மட்டுமே வழங்கப்படும். ஆகக்கூடிய ஒத்திவைப்பு காலம் ஒரு வருடமாகும்.

22. **ஏன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மாணவர்களைப் பதிவுசெய்து அதை வாபஸ் பெறுவதற்கு அனுமதியளிப்பதில்லை?**

பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படை விதிகள் சிக்கலானதாக இருப்பதாலும் சகல மாணவர்களுக்கும் நியாயமான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காகவும் ஆகும்.
அனுமதிக் கொள்கையானது 40% தீவளாவிய திறமை அடிப்படையிலும் 55% மாவட்ட மொத்த சனத்தொகை விகிதாசார அடிப்படையிலும் மற்றும் 5% கல்வியில் பின்தங்கிய மாவட்டத்திற்கு மாணவர்களை அனுமதிக்கின்ற கொள்கையை கொண்டுள்ளது. இலவச உயர் கல்விக்கு சகலருக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் விண்ணப்பிக்கும் சுமார் 87,776 விண்ணப்பதாரிகளில் சிறந்த 42,280 விண்ணப்பதாரிகள் மட்டுமே 125 பட்டப்பயில் நெறிகளுக்கு 40%, 55%, 5% களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்றமையினால் ஒருவருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்களை வழங்க முடியாது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சகல மாணவர்களுக்கும் நியாயமான ஒரேயொரு சந்தர்ப்பத்தினை வழங்குவதற்கான பொறுப்பினை கொண்டுள்ளது. அடுத்துவரும் க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு தோற்றி திறமாக செயற்பட முடியும் என நினைத்து பதிவுசெய்வதா வேண்டாமா என இரு மனமாக இருப்பின் நீங்கள் பதிவுசெய்ய வேண்டாம் என்பதே எமது உண்மையான அறிவுரையாகும்.

23. **தெரிவுசெய்யப்பட்ட மாணவர் பொது சாதாரண பரீட்சையில் 30% புள்ளிகளைப் பெற்றிருக்காவிடின் ?**

குறித்த கல்வியாண்டின் மாணவர் கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்பட்டிருப்பினும் பொது சாதாரண பரீட்சையில் குறைந்தது **30%** புள்ளிகளைப் பெற்றிருக்காவிடின் அவ்வாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு பதிவுசெய்வதற்கு தகுதியற்றவராவர்.

இருப்பினும் அதற்கு முந்தய பல்கலைக்கழக அனுமதிக்காக அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் அவர் பொது சாதாரண பரீட்சையில் குறைந்தது **30%** புள்ளிகளைப் பெற்றிருப்பின் அனுமதிக்கு கருத்திற்கொள்ளப்படும்.

பொது சாதாரண பரீட்சையில் குறைந்தது **30%** புள்ளிகளைப் பெறாத மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குட்பட்டு அடுத்துவரும் அமர்வில் குறைந்தது **30%** புள்ளிகளைப் பெற்றால் மட்டுமே ஏற்கனவே அவரின் Z புள்ளிகளுக்கமைவாக தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கு எதிர்வரும் கல்வியாண்டில் பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.

24. **மாணவர்கள் கற்கைநெறியை மாற்றுவதற்கு எவ்வாறு மேன்முறையீடு செய்வது?**

அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது கற்கைநெறி விருப்பொழுங்கில் விண்ணப்பிக்காத கற்கைநெறிகளுக்கும் குறைந்த விருப்பொழுங்கில் குறிப்பிட்ட கற்கைநெறிகளையும் கோரி விண்ணப்பதாரி மேன்முறையீடு செய்யலாம்.

சகல மேன்முறையீட்டு விண்ணப்பங்களும் தீவிர பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அவை மற்றைய மாணவர்களை பாதிக்காத வகையில் கருத்திற்கொள்ளப்படும். (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

மேன்முறையீடு செய்ய விரும்பும் மாணவர்கள் இக்கைநூலின் இறுதி பக்கங்களில் காணப்படும் மேன்முறையீட்டு விண்ணப்பத்தினை நிரப்பி குறித்த கட்டண பற்றுச்சீட்டுடன் வெட்டுப்புள்ளி வெளியிட்டு நான்கு கிழமைகளுக்குள் பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலின் பிரிவு 4.4 இன் நிபந்தனைகளின்படி விண்ணப்பித்தல் வேண்டும்.

25. **மேன்முறையீடொன்றை சமர்ப்பிப்பதற்கு ஏதேனும் பல்கலைக்கழகத்தின் ஓர் கற்கைநெறிக்கு பதிவு செய்து இருத்தல் அவசியமானதா?**

இல்லை. நீர் தெரிவுசெய்யப்பட்டுள்ள கற்கைநெறிக்கு பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யாத போதிலும் அல்லது எந்த ஒரு கற்கைநெறிக்கும் தெரிவுசெய்யப்படாத போதிலும் கூட நீர் மேன்முறையீடு செய்யலாம்.

26. **உயர் தெரிவிற்கு உயர்த்தப்படல் பிரகடனம் (**Promotion Declaration**) என்றால் என்ன?**

நீர் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியொன்றிற்கு இணையதளம் மூலம் பதிவு செய்யும் போது மட்டுமே இவ் இரு சொல் பதங்களை நீர் காண்பீர்.

எனவே நீர் இணையதளம் மூலம் பதிவினை மேற்கொள்ளும் போதே இது அவசியப்படும்.

இது சாதாரனமாக, நீர் பதிவு செய்வதற்கான படிவத்தினை இணையதளத்தினுடாக நிரப்புகின்ற போது நாம் உம்மை வெற்றிடங்களை நிரப்புகின்ற போது கருத்தில் கொள்ள தேவையில்லை என நீர் கருதும் யுனி-கோட்களை தெரிவு செய்து பின்னர் யுனி-கோட்களின் பட்டியலில் இருந்து அகற்றி விடவும் என கூறுகிறது. ஏனெனில் நாம் உம்மை உமது உயர் விருப்பொழுங்கிற்கே எப்போதும் உயர்த்த முயற்சிப்போம் என்பதால்.

27. **இணையவழி மூலம் உயர் தெரிவிற்கு உயர்த்தப்படல் பிரகடனம்** (Promotion Decleration) **செய்வது எவ்வாறு?**

தெரிவுசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியில் இணையதளம் மூலம் பதிவு செய்யும் போது உமது உயர் விருப்பொழுங்கிற்கு உயர்த்தப்படல் பிரகடனத்தினை மேற்கொள்ள முடியும். அறிவுறுத்தல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. **"Promotion Declaration"** பொத்தானை அழுத்தவும்.

2. இப்போது நீர் தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளதை விட உமது உயர் விருப்பத்தெரிவுக்கமைய ஒழுங்குபடுத்தப்பட்ட "Uni-codes" காட்சிப்படுத்தப்படும்.

3. தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள யுனி-கோட் இனை விட நீர் முன்னுரிமை வழங்கியுள்ள எனினும் எதிர்காலத்தில் வெற்றிட நிரப்பலின் கீழ் உம்மை கருத்தில் கொள்ள வேண்டாம் என கருதும் யுனி-கோட்களை கவனமாக தெரிவு செய்க (சம்மந்தப்பட்ட பெட்டிகளில் **"✓"** அடையாளமிடுக). எவ்வாறாயினும் நீர் தற்போது தெரிவான பல்கலைக்கழகத்தின் கற்கைநெறி (யுனி-கோட்) இலேயே தொடர்ந்தும் இருப்பதற்கும் ஏனைய உமது உயர் விருப்பொழுங்கிற்குரிய பல்கலைக்கழகம் மற்றும் கற்கைநெறி **(**யுனி-கோட்கள்**)** எவற்றிற்கும் உம்மை கருத்தில் கொள்ள வேண்டாம் என கருதின் தற்போது தெரிவான யுனி-கோட் தவிர்ந்த ஏனைய உயர்விருப்பொழுங்கிற்குரிய சகல யுனி-கோட்களையும் நீர் தெரிவு செய்தல் வேண்டும்.

4. பின்னர் **Submit Button** னை அழுத்துவதன் மூலம் யுனி-கோட் பட்டியலிலிருந்து தேவையற்ற யுனி-கோட்களை அகற்றல் வேண்டும். (இணையதள பதிவு முறைமையின் இறுதியில் தோற்றுவிக்கப்படும் இணையதள கொடுப்பனவுப் பத்திரத்தில் (Online Payment Recipt) வெற்றிட நிரப்பலின் கீழ் உம்மை கருத்தில் கொள்ளத் தேவையில்லை என நீர் தெரிவு செய்த யுனி-கோட்களும் தோன்றும்).

5. அகற்றுவதற்கு தெரிவு செய்த யுனி-கோட் பட்டியலை நீர் மீளமைக்க வேண்டுமாயின் மேலே படி 1-4 இனை பின்பற்றுக.

6. எதிர்காலத்தில் வெற்றிட நிரப்பலின் கீழ் உம்மை கருத்தில் கொள்ள வேண்டாம் என கருதும் பல்கலைக்கழகங்களின் கற்கைநெறி (யுனி - கோட்கள்) களினை நீர் அகற்றவில்லை எனின், அனுமதிக்கான விண்ணப்பத்தில் நீர் குறிப்பிட்டுள்ள உயர் தெரிவிற்கமைய பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியொன்றிற்கு உயர்த்தப்படும் போது நீர் அதனை ஏற்றல் வேண்டும்.

28. **நான் இணையதளம் மூலம் தற்போது தெரிவான பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு பதிவு செய்யும் போது நாம் உம்மை வெற்றிடங்களை நிரப்புகின்ற போது கருத்தில் கொள்ள தேவையில்லை என நீர் கருதும் யுனி-கோட்களை தெரிவு செய்து பட்டியலில் இருந்து அகற்றாவிடின் என்னவாகும்?**

எதிர்காலத்தில் வெற்றிட நிரப்பலின் கீழ் உம்மை கருத்தில் கொள்ள வேண்டாம் என கருதும் பல்கலைக்கழகங்களின் கற்கைநெறி (யுனி-கோட்கள் )களினை நீர் அகற்றவில்லை எனின், அனுமதிக்கான விண்ணப்பத்தில் நீர் குறிப்பிட்டுள்ள உயர் தெரிவிற்கமைய பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியொன்றிற்கு உம்மை கருத்தில் கொள்வதை தவிர எமக்கு வேறு தெரிவு இல்லை.

உயர்த்தப்படாது ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் கற்கைநெறி (யுனி-கோட்கள்) இலேயே தொடந்தும் இருப்பதற்கும் நீர் கோராத பட்சத்தில் உம்மை வெற்றிட நிரப்பலின் கீழ், உமது உயர் தெரிவிற்கமைய உயர்த்துவதை விட வேறு தெரிவு எமக்கில்லை. எனவே அனுமதிக்கான விண்ணப்பத்தில் நீர் குறிப்பிட்டுள்ள உயர் தெரிவிற்கமைய பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியொன்றிற்கு வெற்றிடங்களை நிரப்புகையில் உயர்த்தப்படும் போது அதனை ஏற்று நீர் பதிவு செய்தல் வேண்டும்.

ஆகவே, நீர் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு இணையதளத்தினுடாக பதிவு செய்யும் போது இதை எமக்கு அறிவிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

29. **எல்லா யுனி-கோட்களையும் அகற்றாது தற்போது தெரிவான கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகம் (யுனி-கோட்) தவிர்ந்த சில யுனி-கோட்களை மட்டும் வெற்றிட நிறப்பலின் கீழ் கருத்தில் கொள்ளத் தேவையற்ற யுனி-கோட்களாக தெரிவு செய்ய முடியுமா?**

ஆம்.
முதலில் தேவையற்ற யுனி-கோட்களின் பெட்டிகளில் ✓ அடையாளத்தினை இட வேண்டும். பின்னர், **Submit** button அழுத்துவதன் மூலம் யுனி-கோட் பட்டியலிலிருந்து தேவையற்ற யுனி கோட்களை அகற்ற முடியும்.

30. **போதுமான Z-புள்ளிகளை பெற்றிருந்த போதிலும் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தில் குறிப்பிட்டிராத ஓர் பல்கலைக்கழகத்தின் கற்கைநெறி (யுனி-கோட்)ஒன்றிற்கு எனது மேன்முறையீடு கருத்தில் கொள்ளப்படுமா ?**

வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டு 4 கிழமைகளுக்குள் அனுப்பப்பட்ட உமது மேன்முறையீடுகளே கருத்தில் கொள்ளப்படும். எனினும், மேன்முறையீடு செய்யப்பட்ட யுனி-கோட்களுக்கு தெரிவு செய்யப்படல் மிக அரிதானது ஏனெனில் குறித்த அப் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிக்கு வெற்றிடம் காணப்படின் மட்டுமே உமது கோரிக்கை □ர்த்தி செய்யப்படும். இது ஏனெனில் அவ் யுனி-கோட்களை கோரியிருந்த ஏனைய மாணவர்களுக்கு முன்னரே அவ் வாய்ப்பினை நாம் வழங்கியிருப்பதாலாகும். எனவே, உமது பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தில் கூடியளவு யுனி-கோட்களை குறிப்பிடுவது முக்கியமாகும்.

31. **எனது விண்ணப்பப்படிவத்தில் 5 வது விருப்பொழுங்கான பேராதனை பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞானக் கற்கைநெறிக்கு நான் சாதாரன தெரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்டேன். எனினும் எனது 4வது 3வது விருப்பொழுங்குகளான ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது கொழும்பு பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞானம் ஆகிய கற்கைநெறிகளிலேயே அதிக ஈடுபாடு கொண்டிருந்தமையால் பேராதனை பல்கலைக்கழத்தின் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பதிவு செய்வதில்லை என தீர்மானித்தேன். எனவே வெற்றிட நிரப்பலின் கீழ் நான் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் அல்லது கொழும்பு பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு**

**தெரிவாகுவதற்கான வாய்ப்பு ஏதும் உள்ளதா?**

எந்த வாய்ப்பும் இல்லை. தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கு குறித்த பல்கலைக்கழகத்தில் நீர் பதிவு செய்யாது விட்டால், ஏனைய பல்கலைக்கழகங்களில் அதே கற்கைநெறியினை தொடர உமது விண்ணப்பத்தில் உயர் தெரிவாக குறிப்பிட்ட போதும் கருத்தில்கொள்ளப்பட மாட்டீர். எனினும், உமது விண்ணபத்தில் அடுத்த விருப்பொழுங்கிலுள்ள ஏனைய கற்கைநெறி களிற்கு கருத்தில் கொள்ளப்படுவீர்.

ஆகவே எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்தினை விட உயர் தெரிவு வழங்கப்பட்ட வேறு ஒரு பல்கலைக்கழகத்தில் அதே கற்கைநெறியினை தொடர எதிர்பார்த்திருப்பீராயின் முதலில் நீர் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் அக் கற்கைநெறியிற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்ய வேண்டும்.

இல்லாவிட்டால், உமது விண்ணபத்தில் உயர் தெரிவு வழங்கப்பட்ட ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு அவ் கற்கைநெறியினை தொடர எதிர்காலத்தில் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

32. **சாதாரன தெரிவின் கீழ் 5வது விருப்பொழுங்காக குறிப்பிட்டவாறு உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பேராதனை பல்கலைக்கழத்தில் மேலே பரிந்துரைக்கப்பட்டவாறு நான் பதிவு செய்தேன், மேலே அறிவுறுத்தப்பட்டவாறு பின்னர் வெற்றிட நிரப்பலின் கீழ் எனது 4வது விருப்பொழுங்கான ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞானத்திற்கு தெரிவாகியிருந்த போதிலும் எனது 3வது விருப்பொழுங்கான கொழும்பு பல்கலைக்கழத்திலேயே கற்க எதிர்பார்த்திருந்தமையால் வெற்றிட நிரப்பலின் கீழ் தெரிவான உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் பதிவு செய்வதில்லை என தீர்மானித்தேன். எனவே, எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் கொழும்பு பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு தெரிவாகுவதற்கான வாய்ப்பு ஏதும் உள்ளதா?**

எந்த வாய்ப்பும் இல்லை.

பேராதனைப் பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பதிவு செய்த போதிலும் நீர் வெற்றிட நிரப்பலின் கீழ் தெரிவான உமது 4வது விருப்பொழுங்கான ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பதிவு செய்யாது விட்டால் உமது விண்ணப்படிவம் நீர் எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் தெரிவாக எதிர்பாத்து இருக்கும் உமது 3வது விருப்பொழுங்கான கொழும்பு பல்கலைக்கழத்திற்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஆகவே எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் கொழும்பு பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு கருத்தில் கொள்ள எதிர்பாத்து இருப்பின் முதலில் நீர் வெற்றிட நிரப்பலின் கீழ் தெரிவான ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பதிவு செய்தல் வேண்டும். இல்லாவிட்டால், உமது விண்ணப்பபடிவம் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

33. **நான் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு பதிவு செய்யாதுவிடின் எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிறப்புகின்ற போது கருத்தில் கொள்ளப்படுவேனா?**

பகுதி 3 இல் உப பகுதி 3.2 இன் ''முக்கியம்'' பகுதியில் குறிப்பிட்டுள்ளதற்கமைய, நீர் தற்போது தெரிவாகியுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியிற்கு ப.மா.ஆ. இணையதளத்தில் பதிவினை மேற்கொள்ளவில்லை எனின், எதிர்கால வெற்றிட நிரப்பல்களின் கீழ் அதே கற்கைநெறியினை உயர் தெரிவு வழங்கப்பட்ட வேறு எந்த பல்கலைக்கழகத்திலும் மேற்கொள்ள உம்மை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

எவ்வாறாயினும் நீர் தற்போது தெரிவுசெய்யப்பட்டு பதிவினை மேற்கொள்ளாத கற்கைநெறி தவிர்ந்த ஏனைய உயர்தெரிவு வழங்கியுள்ள கற்கைநெறிகளுக்கு எதிர்கால வெற்றிட நிரப்பல்களின் கீழ் உமது விண்ணப்பப்படிவம் கருத்தில்கொள்ளப்படும்.